# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

## இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 74 — 1980 පෙබරවාරි 01 වැනි සිකුරාද — 1980.02.01

74 ம் இலக்கம் — 1980 ம் ஆண்டு பெப்புருவரி மாதம் 01 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I: தொகுதி (I)—பொது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவை செய்துவைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| சனாதிபதியின் பிரகடனங்களும் பிறவும் .. .. | — | விலைக்கட்டளைகள் .. .. .. | — |
| சனாதிபதியின் நியமனங்களும் பிறவும் .. .. | 46 | இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள் .. .. | — |
| அமைச்சரவை நியமனங்களும் பிறவும் .. .. | — | இலங்கை அரசாங்கக் கணக்கு விபரங்கள் .. .. | — |
| அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் .. | — | வரவு செலவுத் திரட்டுக்கள் .. .. .. | — |
| நீதிச் சேவைகள் ஆலோசனைச் சபையின் நியமனங்களும் பிறவும் | — | அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள் .. | 55 |
| மற்றைய நியமனங்களும் பிறவும்.. .. .. | 47 | மாலுமிகளுக்கு அறிவித்தல்கள் .. .. .. | — |
| பதிவாளர் நியமனங்களும் பிறவும் .. .. | — | " மதுவரிச் சட்ட " அறிவித்தல்கள் .. .. | — |
| அரசாங்க அறிவித்தல்கள் .. .. .. | 51 | | |


*கவனிக்க.—(i) களரிகளுக்கு உரிமமளித்தல் (திருத்தம்) சட்டமூலமும் நிதி (திருத்தம்) சட்டமூலமும் 1980 ஆம் ஆண்டு சனவரி மாதம் 18 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II இற்குக் குறைநிரப்பி களாகப் பிரசுரிக்கப்பட்டுள்ளன.*

*(ii) இவ்வர்த்தமானியோடு பிரசுரிக்கப்பட்ட பகுதி VI இல் யூரிமார், மதிப்பீட்டாளர் பட்டியல் அடங்கியுள்ளது.*

**1979 யூலை 6 ஆந் தேதியிலிருந்து வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

## முக்கிய அறிவித்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதியினதும் ஒவ்வொரு தொகுதியின் இறுதியிலும் ஒவ்வொரு மாதத்தின் முதல்வார வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருக்கும், வாராந்த வர்த்தமானியிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் தேதிகள், நேரங்கள் சம்பந்தமான "முக்கிய அறிவித்தல்"களுக்கு கவனம் கோரப்படுகின்றது. தற்போதைய ஒழுங்கின்படி பகுதி I: தொகுதிகள் (IIஅ) விலும் (II ஆ) விலும் பகுதி IV (அ) விலும் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதியும் நேரமும் அறிவித்தல் பிரசுரமாகும் வாரத்துப் புதன்கிழமைக்கு நேர்முந்திய புதன்கிழமை நண்பகல் 12 மணி ஆகும். பகுதி IV (ஆ) விலும் ஏனைய பகுதிகளிலும் பிரசுரிக்கப் படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் தேதியும் நேரமும் வர்த்தமானி பிரசுரமாகும் தேதிக்கு ஒரு வாரத்துக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியாகும்.

1979, யூலை 6 ஆந் தேதியிலிருந்து வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதியிலும் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசி நாள், வர்த்தமானியில் அறிவித்தல் பிரசுரமாகும் தேதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியாகும். வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்களுக்கும், கேள்விப்பத்திரங்களுக்கும் கடைசித் தேதியும் நேரமும், ஏல விற்பனைகளுக்குத் தேதியும் நேரமும் குறிக்கும் அறிவித்தல்கள் தயாரிக்கப்படும்போது மேற்கண்ட மாற்றத்துக்குக் கவனஞ்செலுத்துமாறும், பிரசுரமாகும் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறையுள்ளவர்கள் ஆக்கபூர்வமாகவும் வெற்றிகரமாகவும் பங்குகொள்வதற்கியலும் வகையில் அறிவித்தல்கள் அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பப்படச் செலவாகும் நேரத்தையும் அவை பிரசுரமாகும் தேதியையும் கருத்திற் கொள்ளுமாறும் எல்லா அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன.

1979, யூலை 6 ஆந் தேதியிலிருந்து ஒவ்வொரு மாதத்துக்குமான அட்டவணை ஏற்றமுறையில் திருத்தப்படும். எல்லா அறிவித்தல்களும் கண்டிப்பாக அவை பிரசுரமாகும் தேதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு முன் இத் திணைக்களத்தை வந்தடைய வேண்டும். அதாவது 1980, பெப்புருவரி 08 ஆந் தேதி வெளியிடப்படும் வர்த்தமானியிற் பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 1980 சனவரி 25 ஆந் தேதி நண்பகலிலோ அதற்கு முன்னரோ அரசாங்க அச்சகத்தை வந்தடைய வேண்டும்.

எல். டப்ளியு. பீ. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
1979 ம் ஆண்டு யூன் மீ 01 ந் உ.

103. சி. ஆர். பீ. பண்டா அவர்களை அவிசாவளை நீதி நிருவாக மாவட்டத்திற்கான ஒரு சமாதான நீதி வானுகவும்,

104. சி. ஆர். பி. அப்புஹாமி அவர்களை அவிசாவளை நீதி நிருவாக மாவட்டத்திற்கான ஒரு சமாதான நீதி வானுகவும்,

105. கே. எம். விஜேரத்ன அவர்களை அவிசாவளை நீதி நிருவாக மாவட்டத்திற்கான ஒரு சமாதான நீதி வானுகவும்,

106. பி. அத்துகல அவர்களை அவிசாவளை நீதிநிருவாக மாவட்டத்திற்கான ஒரு சமாதான நீதிவானுகவும்,

107. ஜே. எஸ். மல்லவ அவர்களை அவிசாவளை நீதிநிருவாக மாவட்டத்திற்கான ஒரு சமாதான நீதிவானுகவும்,

108. ஆர். பி. சேத்தன் அவர்களை அவிசாவளை நீதிநிருவாக மாவட்டத்திற்கான ஒரு சமாதான நீதிவானுகவும்,

109. குணபால திசாநாயக்க அவர்களை அவிசாவளை நீதி நிருவாக மாவட்டத்திற்கான ஒரு சமாதான நீதி வானுகவும்,

110. கே. ஏ. தயானந்த அவர்களை அவிசாவளை நீதிநிருவாக மாவட்டத்திற்கான ஒரு சமாதான நீதிவானுகவும்,

111. வி. ஏ. மாரிமுத்து அவர்களை அவிசாவளை நீதிநிருவாக மாவட்டத்திற்கான ஒரு சமாதான நீதிவானுகவும்,

112. ரணவீர ஆரச்சிலாகே சிறிசேன அவர்களை அவிசாவளை நீதிநிருவாக மாவட்டத்திற்கான ஒரு சமாதான நீதிவானுகவும்,

113. ஹமீட்லெப்பை முகம்மது ஹாதி அவர்களை அவிசாவளை நீதிநிருவாக மாவட்டத்திற்கான ஒரு சமாதான நீதிவானுகவும்,

114. சட்டத்தரணி இமானுவேல் சியல் பெல்டனே அவர்களை மன்னர் நீதிநிருவாக மாவட்டத்திற்கான ஒரு சமாதான நீதிவானுகவும், உத்தியோகத் தொடர்பற்ற நீதிவானுகவும்,

115. சட்டத்தரணி ஏ. சி. எம். யுசுப் அவர்களை மாவனல்ல நீதிநிருவாக மாவட்டத்திற்கான ஒரு சமாதான நீதிவானுகவும், உத்தியோகத் தொடர்பற்ற நீதி வானுகவும்,

116. சட்டத்தரணி பிரேமச்சந்திர ரணதுங்க அவர்களை மாவனல்ல நீதிநிருவாக மாவட்டத்திற்கான ஒரு சமாதான நீதிவானுகவும், உத்தியோகத் தொடர்பற்ற நீதிவானுகவும்,

117. பியசேன மனம்பேரி அவர்களை தீவு முழுவதிற்குமான ஒரு சமாதான நீதிவானுகவும்,

இத்தால் நியமிக்கின்றேன்.

கே. டப்ளியு. தேவநாயகம்,
நீதி அமைச்சர்.

நீதி அமைச்சு,
கொழும்பு 12,
1980, சனவரி 11 ஆம் நாள்.

2-65/4—01.02.80 ந் திகதிய வர்த்தமானி இல. 74

## அரசாங்க அறிவித்தல்கள்

### 1973 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க தேசிய சுவடிக்கூடச் சட்டம்

1973 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க தேசிய சுவடிக்கூடச் சட்டத்தின் 16 (ஈ) பிரிவின் கீழ் அமைந்த ஒழுங்குவிதி.

1973 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க தேசிய சுவடிக்கூடச் சட்டத்தின் 16 (ஈ) பிரிவின் கீழ் பண்பாட்டு அலுவல் அமைச்சரினுல் ஆக்கப்பட்டுப் பாராளுமன்றத்தினுல் அங்கீகரிக்கப்பட்ட ஒழுங்குவிதி.

ஈ. எல். பி. ஹுருள்ளே,
பண்பாட்டு அலுவல் அமைச்சர்.

கொழும்பு, 4 சனவரி, 1980

### ஒழுங்குவிதி

1979.12.15 ஆம் நாளது அரசாங்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 1973 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க தேசிய சுவடிக்கூடச் சட்டத்தின் 16 (ஈ) பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள், 3 (இ) . பந்திக்காகப் பின்வரும் பந்தியை பதிலீடு செய்வதினுல் வருமாறு திருத்தஞ் செய்யப்படுகிறது :—

"(இ) சட்டத்தின் II ஆம் பிரிவின் நியதிகளின்படி சேர்க்கப்பட்டதும் பந்தி 2 இல் குறிப்பிடப்பட்டதுமான பொதுச் சுவடிகளை அவை மூடப்பட்டுள்ள காலப் பருதியில் எவரேனும் பரிசீலித்தற்கு விருப்பமுறின், விசாரணை ஆணைக்குழுக்கள் சட்டத்தின்கீழ் அன்றேல் 1978 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க விசேட சனதிபதி விசாரணை ஆணைக்குழுக்கள் சட்டத்தின்கீழ் நியமிக்கப்பட்ட ஆணைக்குழுக்களினுல் உருவாக்கப்பட்ட பதிவேடுகளின் விடயத்தில் சனுதிபதியின் செயலாளரிடமிருந்து, விசாரணை ஆணைக்குழுக்கள் சட்டத்தின் கீழ் அமைச்சர்களினுல் நியமிக்கப்பட்ட விசாரணைக் குழுக்களினுல் உருவாக்கப்பட்ட பதிவேடுகளின் விடயத்தில் உரிய அமைச்சின் செயலாளரிடமிருந்தும் அத்தகைய பரிசீலனைக்கான எழுத்துமூல அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்படுதல் வேண்டும்".

- 137—01.02.80 ந் திகதிய வர்த்தமானி இல. 74